www.Padasalai.Net www.TrbTnpsc.com




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# ஆர்வமூட்டும் செயல்பாடு

10 நிமிடங்கள்

www.Padasalai.Net

# அடைமொழியுடன் பெயர்

- ஏதுவாளர் பங்கேற்பாளர்களிடம் தங்கள் பெயருக்கு முன்பாக ஒரு அடைமொழியை சூட்டிக் கொள்ளுங்கள் என்று கூறுவார்.
- பங்கேற்பாளர்களிடம் தங்கள் பெயருடன் ஒரு அடைமொழியை சேர்த்துக் கொள்வர்.
- எடுத்துக்காட்டாக... விடாமுயற்சி டேவிட் என்று பெயருக்கு முன் அடைமொழிச் சூட்டிக்கொண்டால் அதன்படி விடாமுயற்சி உடைய பண்பு நலன்கள் நான்கினை குறிப்பேட்டில் எழுத வேண்டும் .
- பின்னர் பங்கேற்பாளர்கள் முன் ஒவ்வொருவரும் வழங்கிட வேண்டும்.
- காலத்தின் அருமை கருதி 5 அல்லது 6 பேர் மட்டும் வழங்கினால் போதுமானது.

# பயிற்சியின் நோக்கம்

- கற்றல் விளைவுகள் பற்றி தெரிந்து கொள்ள...
- கற்றல் விளைவுகளை செயல்பாடு அடிப்படையில் புரிந்து கொள்ள...
- படித்துப் பொருளறிதல், இலக்கணக்கூறுகளைப் புரிந்து பயன்படுத்திட....
- புதிய கற்றல் விளைவுகளை சொந்தமாக உருவாக்கிட....

www.Padasalai.Net


# அமர்வு - 1

# கற்றல் விளைவுகள் (பொது)

45 நிமிடங்கள்

www.Padasalai.Net

# தேசிய அடைவு ஆய்வு முடிவுகள்- 2021




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com


# தேசிய அடைவு ஆய்வு முடிவுகள்- 2021

## Percentages of Students by Performance Level

| | BELOW BASIC | BASIC | PROFICIENT | ADVANCED |
|---|---|---|---|---|
| Mathematics | 40 | 52 | 7 | 1 |
| Science | 85 | 13 | 2 | 0 |
| Social Science | 67 | 25 | 7 | 1 |
| English | 22 | 18 | 44 | 16 |
| MIL | 58 | 38 | 4 | 0 |

www.Padasalai.Net

# தேசிய அடைவு ஆய்வு முடிவுகள்- 2021




* MIL - Modern Indian Language

www.Padasalai.Net

# தேசிய அடைவு ஆய்வு முடிவுகளின் படி தமிழ்நாடு பெற்றுள்ள இடம்

| SUBJECT | OVER ALL | 2017 | 2021 |
|---|---|---|---|
| MIL | STATE | 47% | 39% |
| | NATIONAL | 49% | 41% |

**Position of Tamil Nadu in 2017 & 2021**

| Class/Year | 2017 | 2021 |
|---|---|---|
| III | 21 | 18 |
| V | 20 | 25 |
| VIII | 24 | 36 |
| X | 18 | 30 |
| Overall | 21 | 27 |

# கலந்துரையாடுவோமா!

- **தேசிய அடைவு ஆய்வில் நாம் பின்தங்க காரணம் என்ன?**
- **அதிக அடைவு பெற என்ன செய்யலாம்?**

(பதில்களை கரும்பலகையில் எழுதுதல்)

கற்றல் விளைவுகள் மாணவர்களிடம் சரியாக சென்று சேர்ந்தால் அடைவு ஆய்வில் சிறந்து விளங்கலாம்.

www.Padasalai.Net

# கற்றல் விளைவு

ஒரு பாடப்பொருளைக் கற்று முடித்த பின்னர் மாணவர் அடைய வேண்டிய திறனே கற்றல் விளைவு ஆகும்.



www.Padasalai.Net

# கற்றல் விளைவுகளின் முக்கியத்துவம்

- கற்றல் விளைவுகள் அடிப்படையில் தேசிய அடைவு ஆய்வு நடைபெறுகிறது.
- கற்றல் முறையில் குருட்டு மனப்பாடத்தை தவிர்க்கிறது.
- மாணவர்கள் தாங்களே அறிவை பெருக்கிக் கொள்ள வழிவகை செய்கிறது.

www.Padasalai.Net

# கற்றல் விளைவு எப்படி இருக்க வேண்டும்?

- அன்றாட வாழ்க்கைச் சூழலில் பயன்படுவதாக இருக்க வேண்டும்.
- பாடக்கருத்துகள் செயல்பாடுகள் வழியாக மாணவர்களை சென்றடைய வேண்டும்.
- மதிப்பீடு செய்யும் வகையில் இருத்தல் வேண்டும்.

www.Padasalai.Net

# மொழிப்பாடத்தில் கற்றல் விளைவு எவ்வாறெல்லாம் வெளிப்படும்?

- பேச்சாக /பாடல் பாடுவதாக/ கதை கூறுவதாக /குரல் ஏற்ற இறக்கத்துடன் அறிவிப்பாளராக/நேரடி வருணனையாளராக/செய்தி வாசிப்பாளராக...)
- படித்துக் காட்டுவதாக- (அறிவிப்பு, துண்டு பிரசுரம், சிறுவர் இதழ், செய்தித்தாள், பேருந்து தகவல் பலகை...)
- எழுதிக் காட்டுவதாக (பார்த்து,கேட்டு எழுதுதல், நிரப்புதல், கருத்தை வெளிப்படுத்துதல், கடிதம் எழுதுதல், மதிப்புரை எழுதுதல், விமர்சனம் எழுதுதல்)
- சொற்களின் பொருளை அகராதி மூலம் அறிந்து அவற்றை பயன்படுத்தி பேசுதல், எழுதுதல்.
- நேரம் தவறாமை, உண்மை பேசுதல், தூய்மை கடைபிடித்தல், பிறருக்கு உதவுதல், மனித நேயம், பொதுவுடமைக் பாதுகாத்தல் போன்ற பண்புகளை வெளிப்படுத்துவதன் மூலமாக... இன்ன பிற..

# கற்றல் விளைவுகளின் கூறுகள்

1. மாணவர் செயல்பாடு
2. பாடப்பொருள்
3. சூழல்

www.Padasalai.Net

# கற்றல் விளைவு

**1003.இயற்கையின் ஆற்றல், அழகியல், தமிழர் வாழ்வியல், பண்பாடு, அறம் குறித்த செய்திகளைப் பாடநூல்/ பாடநூலுக்கு அப்பால் அறிந்து வெளிப்படுத்துதல்.**


1. மாணவர் செயல்பாடு:வெளிப்படுத்துதல்


2.பாடப்பொருள்:இயற்கையின் ஆற்றல், அழகியல், தமிழர் வாழ்வியல், பண்பாடு, அறம் குறித்த செய்திகள்

3.சூழல்:வகுப்பறை, சுற்றுப்புறம்



# தேநீர் இடைவேளை





**15நிமிடங்கள்**



www.Padasalai.Net

# அமர்வு - 2

## பாடப் பொருளுக்கான கற்றல் விளைவு மற்றும் செயல்பாடுகள்

45நிமிடங்கள்

www.Padasalai.Net

# கற்றல் விளைவு

**1003.இயற்கையின் ஆற்றல், அழகியல், தமிழர் வாழ்வியல், பண்பாடு, அறம் குறித்த செய்திகளைப் பாடநூல்/ பாடநூலுக்கு அப்பால் அறிந்து வெளிப்படுத்துதல்.**

**(இயல் 3.பண்பாடு-கூட்டாஞ்சோறு-உரைநடை உலகம் -விருந்து போற்றுதும்! ப.49)**

### தெரிந்து தெளிவோம்

**வாழை இலையில் விருந்து**

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு. தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துவப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர்.

தமிழர்கள் உணவு பரிமாறும் முறையை நன்கு அறிந்திருந்தனர். உண்பவரின் இடப்பக்கம் வாழை இலையின் குறுகலான பகுதியும் வலப்பக்கம் இலையின் விரிந்த பகுதியும் வரவேண்டும். ஏனென்றால் வலது கையால் உணவு உண்ணும் பழக்கமுடையவர்கள் நாம். இலையில் இடது ஓரத்தில் உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான அளவில் சிறிய உணவு வகைகளையும் வலது ஓரத்தில் காய்கறி, கீரை, கூட்டு முதலான அளவில் பெரிய உணவு வகைகளையும் நடுவில் சோறும் வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள். உண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறுவர்.



விருந்தோம்பல்
17 ஆம் நூற்றாண்டுச் சுவரோவியம், சிதம்பரம்.

**எழுதுவோமா?**

**உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினருக்கு நீ எவ்வாறு விருந்தோம்பல் செய்தாய் என்பதை உன் நண்பருக்கு கடிதம் எழுது.**

# செயல்பாடுகளை இப்படியும் கொடுக்கலாம்...

- வீட்டில் திண்ணை அமைத்த காரணம், விருந்தினர் பேணுதல், தமிழர் பண்பாட்டில் ஈகை, பசித்தவருக்கு உணவிடல் - இதுபோன்ற செயல்கள் குறித்து உங்கள் வீட்டில் உள்ளவர்களிடம் கேட்டு தெரிந்து வகுப்பறையில் கலந்துரையாடல் செய்க.
- நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வருகிறார். நீங்கள் அவரை எதிர்கொண்டு விருந்தளித்த நிகழ்வினை விரிவாக கட்டுரை வரைக.
- உணவு, விருந்து குறித்த பழமொழிகளைத் திரட்டி அவை சார்ந்த நிகழ்வுகளோடு தொகுப்பு தயாரிக்க.
- பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயலையும் விருந்தினருக்கு உணவிடுதல் என்ற பண்பாட்டுச் செயலையும் ஒப்பிட்டு பேசுக.

உங்கள் கற்பனையை இணைத்து நிகழ்வை கதையாக்குக.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் இடையே சின்னஞ்சிறு சச்சரவுகள் ஏற்பட்டு இரண்டு பேருமே முகத்தை தூக்கி வைத்துக்கொண்டு ஆளுக்கொரு மூலையில் உட்கார்ந்து இருக்கும்போது, விருந்தினர் வருகை அவர்களை அன்பான கணவன் மனைவியாக மாற்றிவிடும். அம்மாவின் கெடுபடியும் அப்பாவின் கீழ்ப்படிதலும் ஆச்சரியமாக இருக்கும். விருந்தாளிகள் அடிக்கடி வர மாட்டார்களா என்று இருக்கும்.

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# கண்டறிவோம்! வடிவமைப்போம்!

பாடப் பொருளுக்கு பொருத்தமான கற்றல் விளைவை கண்டறிந்து அதற்குப் பொருத்தமான செயல்பாடுகளையும் வடிவமைக்கவும்.

## குழுச் செயல்பாடு

## (6 குழுக்கள், குழுவிற்கு 7 பேர்)

குழு -1: 1.மொழி -கவிதைப் பேழை- தமிழ்விடு தூது- ப. 10 (ஒன்பதாம் வகுப்பு)
குழு -2 : 3.பண்பாடு -ஏறுதழுவுதல்- ப. 64 (ஒன்பதாம் வகுப்பு)
குழு -3: 6.கலை ,அழகியல், புதுமைகள் - சிற்பக்கலை- ப.152 (ஒன்பதாம் வகுப்பு)
குழு-4: 2.இயற்கை ,சுற்றுச்சூழல்- கேட்கிறதா என் குரல்- ப. 26(பத்தாம் வகுப்பு)
குழு -5: 8.அறம்,தத்துவம், சிந்தனை- சங்க இலக்கியத்தில் அறம் - ப.184(பத்தாம் வகுப்பு)
குழு -6: 9.மனிதம் ,ஆளுமை- ஜெயகாந்தம் (நினைவு இதழ்) ப.204(பத்தாம் வகுப்பு)

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# கற்றல் விளைவுகளின் எண்ணிக்கை
## 9 ஆம் வகுப்பு : 25
## 10 ஆம் வகுப்பு : 25

# கற்றல் விளைவுகள்- வளர்ச்சி நிலை

905. பாடநூலில்/ பாடநூலுக்கு அப்பாற்பட்டுள்ள கதை, கவிதை, ஓரங்க நாடகம், உரைநடை , செய்யுள் போன்றவற்றைப் படித்து நயம் பாராட்டல்.

1005. பாடநூலில் பாடநூலுக்கு அப்பாற்பட்டுள்ள இலக்கியங்களைப் படித்து கதை, கவிதை, கட்டுரை, நாடகம், ஓரங்க நாடகம் ஆகிய வடிவங்களில் வெளிப்படுத்துதல்.

www.Padasalai.Net

# தேசிய அடைவு ஆய்வில் வினவப்படும் வினாக்களுக்கான கற்றல் விளைவு

**Reads textual/non-textual materials with comprehension and identifies the details, characters, main idea and sequence and events while reading**

**உரைப்பத்தி/ உரைப்பத்தி அல்லாதவற்றைப் (விளம்பரம், அறிவிப்புகள், விழா நிகழ்ச்சி நிரல், உரையாடல், அட்டவணைப்படுத்தப்பட்ட செய்திகள் போன்றவை) படித்து புரிந்து கொண்டு அதன் விவரங்கள், நிகழ்வில் இடம் பெறும் மாந்தர்கள், முதன்மைக் கருத்து, வரிசைமுறை மற்றும் நிகழ்வுகளை மற்றும் அடையாளம் காணல்.**

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# வினாக்கள் அமைக்கும் போது இந்த வகைப்பாட்டினை கருத்தில் கொள்ள வேண்டும்

| | | | |
|---|---|---|---|
| உரைப்பத்தி | அட்டவணை | விளம்பரம்/சுவரொட்டி | உரையாடல் |
| மையக்கருத்து சொற்பொருள் | ஒற்றுமை, வேற்றுமை | யாரால் கொடுக்கப் பட்டது? | மையக்கருத்து |
| சூழல் பொருள் | ஒப்பீடு தொடர்பு படுத்துதல் | நோக்கம் | யாரால் கூறப்பட்டது? |
| வரிசைமுறை ஊகித்தறிதல் | தொகுத்தல் | ஆண்டு,தேதி, நேரம் | சொற்பொருள் |
| கதைமாந்தர் பண்பு நலன் | பகுத்தறிதல் | என்ன நிகழ்வு? | சூழல் பொருள் தொடர்ச்சி |

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வினாக்களை உருவாக்குதல்




| வகை | சிந்தனை நிலை |
|---|---|
| குறைந்தநிலைச்<br>சிந்தனை வினாக்கள்<br>LOT | நினைவு கூர்தல் (Remembering) |
| நடுநிலைச்<br>சிந்தனை வினாக்கள்<br>MOT | புரிந்து கொள்ளுதல்<br>(Understanding)<br>பயன்படுத்துதல்<br>(Applying) |
| உயர்நிலைச்<br>சிந்தனை வினாக்கள்<br>HOT | பகுத்தாய்தல்(Analyzing)<br>மதிப்பிடல்(Evaluating)<br>உருவாக்குதல்(Creating) |




www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com



# மதிய உணவு இடைவேளை




30 நிமிடங்கள்

www.Padasalai.Net



# அமர்வு 3:

## படித்து பொருளறிதல் மற்றும் இலக்கணக்கூறு வினாக்கள்



30 நிமிடங்கள்

www.Padasalai.Net

# 1.பத்தியைப் படித்து புரிஞ்சுக்கலாமா?

மு.வ.அவர்கள் தன் தங்கைக்கு எழுதிய கடிதத்தில்," நிறைந்த உள்ளத்தோடுதான் பின்வரும் அறிவுரைகளை எழுதுகிறேன். அறிவுரைகள் எழுதுவதைக் கண்டதும் உன்னிடம் ஏதோ குறை கண்டு எழுதினேன் என்று கேள்விப்பட்டு எழுதுகிறேன் என்றோ எண்ணி விட வேண்டாம். குறை இருந்தால் தான் அறிவுரை கூற வேண்டும் என்பதில்லை. குறை நேராமல் இருக்க வேண்டும் என்பதற்காகவும் அறிவுரை கூற வேண்டும் அல்லவா? அந்த வகையில் தான் என் கடமையை செய்ய முன் வருகிறேன். எத்தனையோ படிக்கின்றாய்; கேட்கின்றாய்; இவற்றையும் படி; கேட்டுக் கொள்.

ஓய்வு இருக்கும் போது எண்ணிப்பார். ஒரு செம்மறி ஆடு முன்னே சென்று இடர்ப்பட்டால் பின்னே வரும் ஆடுகள் அதனைக் கண்டு ஒன்றும் திருந்துவதில்லை; பயனடைவதில்லை; முன்னே சென்றது விழுந்த பள்ளத்திலேயே எல்லாம் சென்று விழுமாம். மனிதராகிய நாம் ஏன் அப்படி விழ வேண்டும். ஆகையால் மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைவுகளையும் எண்ணி பார்ப்பது, நம்மை நாம் காத்துக் கொள்வதற்கு மிகவும் பயன்படும். உண்மையாக ஆராய்ந்தால் இப்படி நேரே வாழ்க்கையைக் கற்பதுதான் உயர்ந்த கல்வி. எனவே உயர்ந்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாறு படி" என்று குறிப்பிடுகிறார்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வினாக்கள்

1.அறிவுரைகள் கூறுவது

அ.பிரிவதற்கு
ஆ.முன்னேறுவதற்கு
இ.குறை நேராமல்இருப்பதற்கு
ஈ.வெற்றி பெறுவதற்கு

2.ஓய்வு நேரத்தில் செய்ய வேண்டிய பணிகள்

அ. படித்தல், கேட்டல், சிந்தித்தல்
ஆ.சேர்தல், பிரிதல், மறத்தல்
இ.தருதல், கொடுத்தல், ஈதல்
ஈ.ஓடுதல், நடத்தல், செல்லல்

3.ஒரு செம்மறி ஆடு முன்னே சென்று விழுந்தால் பிற செம்மறி ஆடுகள்
அ.திருந்துவதில்லை
ஆ.திருந்தும்
இ.விழாது
ஈ.சிறக்கும்



4.மனிதர்கள் தம்மைக் காத்துக் கொள்வதற்கு செய்ய வேண்டுவன

அ.மற்றவர்களின் வாழ்க்கையில் உள்ள குறைகளை எண்ணிப் பார்த்தல்
ஆ.மற்றவர்களை புகழுந்துரைத்தல்
இ.தம் மனதில் தோன்றியதைச் செய்தல்
ஈ.பிறரை கண்டு பொறாமைப்படுதல்

5.குறை நேராமல் இருக்க செய்ய வேண்டுவது

அ.அறிவுரை கேட்பது
ஆ.தன்னிச்சையாக செயல்படுவது
இ.குறை கூறுவது
ஈ.பிறரைப் போற்றுவது

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

## 2.விளம்பரத்தினைப் படித்து வினாக்களை உருவோக்குவோமா!



# வினாக்கள்

1.”தொல்லியல்” என்பது
எதனைப் பற்றியது?
அ) புறஆய்வு சார்ந்தது
ஆ) அகழாய்வு சார்ந்தது
இ) கள ஆய்வு சார்ந்தது
ஈ) அக ஆய்வு சார்ந்தது

2.தொல்லியல் துறை எதனைப்
பாதுகாக்கும் துறையாகும்?
அ) ஆவணங்களை
ஆ)உயிர்க்கோளங்களை
இ) புலிகளை
ஈ) வரலாற்றுச் சின்னங்களை

3.“திங்கட் சொற்பொழிவு “ இத்தொடரில்
அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்
என்ன?
அ) மாதம்
ஆ) திங்கட்கிழமை
இ) நிலவு
ஈ) அம்புலி

4. கல்வெட்டுகளைப் பற்றிக்
கூறும் இலக்கண நூல் எது?
அ) நன்னூல்
ஆ) தண்டியலங்காரம்
இ) தொல்காப்பியம்
ஈ) வீரசோழியம்



5.சொற்பொழிவு நடைபெறும்
இடம் எது ?
அ) தமிழ்நாடு பாடநூல்
கழகம்
ஆ) தமிழ் இணையக் கல்விக்
கழகம்
இ) தமிழ் பல்கலைக்கழகம்
ஈ) தமிழ் வெளியீட்டுக் கழகம்



www.Padasalai.Net

# 3.உரைவீச்சினைப் படித்து வினாக்களுக்குவிடையளிப்போமா!



பூச்சிகளை அழிப்பது நன்மையல்ல. சிலந்தி வலையில் அந்திப்பூச்சி சிக்கினால் சிலந்தி அதை உண்கிறது. தட்டான்பூச்சி பறக்கும் இடத்திலுள்ள புழு, பூச்சிகளை உண்கிறது. பயிர்களை உண்பது பத்துப் பூச்சிகளாக இருந்தால், அந்தப் பத்துப் பூச்சிகளை உண்ண பத்தொன்பது பூச்சிகள் உள்ளன. எல்லாப் பூச்சிகளையும் உண்ண இருநூறு வகையான பறவையினங்கள் உள்ளன.

பூச்சிகளை நாம் பூச்சி மருந்து கொண்டு அழித்துவிட்டால் பறவையினங்கள் வாழ வாய்ப்பில்லை. எனவே உணவுச்சங்கிலி அறுந்துவிடுகிறது. ஆகவே உணவுச்சங்கிலி பாதிக்கப்படாமல் ஆடாதொடை, ஊமத்தை, எருக்கு, துளசி, தும்பை, துத்தி, பப்பாளி, நொச்சி, வேம்பு, வேலிப்பருத்தி, அரளி, நீலகிரித் தைலமரம் போன்ற இருபது வகையான செடிகளில் கிடைக்கும் செடிகளை உரலில் இடித்து சாறுடன் ஒரு பானைக்குள் வைத்து ஒருவாரம் கழித்து எடுத்தால் பூச்சிக்கொல்லியைத் தயாரித்துவிடலாம்.

இயற்கையில் எல்லா ஆற்றலும் உண்டு. தமிழ்ச்சமுதாயம் மூத்த சமுதாயம். ஆனால், நாம் நம் மூதாதையர்களின் ஞானத்தை இழந்துவிட்டோம். மரத்தை வெட்டிவிட்டால் மண்ணரிப்பு ஏற்பட்டு மேல்மணல் அரித்துக்கொண்டு சென்றுவிடும். மேல்மணலில்தான் அனைத்து சத்துகளும் உள்ளன. எனவே, இயற்கையைப் பாதுகாத்தல் அவசியம். இதனையே கணியன் பூங்குன்றனார் “தீதும் நன்றும் பிறர் தர வாரா” என்று கூறியுள்ளார்.இதை மனத்தில் கொண்டு மரங்களை அழிக்காமல், நம் எதிர்காலத்தை நாமே காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.

இந்த நேரத்தில் உங்களுடன் இந்தத் தகவல்களைப் பகிர்ந்துகொள்ள வாய்ப்பு கொடுத்ததற்கு நன்றி.



# வினா

## பூச்சிகளை ஒட்டுமொத்தமாக அழித்துவிட்டால் என்னநேரும் ?

அ)மண்ணரிப்பு ஏற்படும்
ஆ)மழைவளம் குறையும்
இ)காற்று மாசுபடும்
ஈ)உணவுச்சங்கிலி அறுந்துவிடும்.



www.Padasalai.Net

# 4.அட்டவணையைப் படித்து விடையளிப்போமா!

| | குறிஞ்சித்திணை | பாலைத் திணை | முல்லைத் திணை | மருதத் திணை | நெய்தல் திணை |
|---|---|---|---|---|---|
| நிலம் | மலையும், மலை சார்ந்தஇடமும் | சுரமும், சுரம் சார்ந்த இடமும் | காடும், காடுசார்ந்த இடமும் | வயலும்வயல்சார்ந்த இடமும் | கடலும், கடல்சார்ந்த இடமும் |
| மக்கள் | சிலம்பன், குறவர், குறத்தியர் | விடலை, எயினர், எயிற்றியர் | நாடன், ஆயர், ஆய்ச்சியர் | ஊரன், உழவர், உழத்தியர் | இறைவன், பரதவர், பரத்தியர் |
| பறவை | கிளி, மயில் | கழுகு, பருந்து | காட்டுக்கோழி | நாரை, அன்னம் | நீர்க்காக்கை |
| ஊர் | சிறுகுடி | குறும்பு | பாடி, சேரி | பேரூர், மூதூர் | பட்டினம், பாக்கம் |
| பூ | காந்தள், குறிஞ்சி, வேங்கை | மரா, பாதிரி, குரா | முல்லை, பிடவம், தோன்றி | தாமரை, குவளை, கழுநீர் | தாழை, நெய்தல், புன்னை |
| உணவு | தினை, மலைநெல், மூங்கிலரிசி | வழிப்பறிசெய்தபொருள் | வரகு, சாமை, முதிரை | செந்நெல், வெண்ணெல்லரிசி | மீனும், உப்பும்விற்றால்பெறும் பொருள் |
| யாழ் | குறிஞ்சியாழ் | பாலையாழ் | முல்லையாழ் | மருதயாழ் | விளரியாழ் |
| தொழில் | தேனெடுத்தல், கிழங்குஅகழ்தல் | நிரைகவர்தல், சூறையாடல் | வரகுவிதைத்தல், களைபறித்தல் | நெல்லரித்தல், கடாவிடுதல் | மீன்பிடித்தல், உப்புவிற்றல் |
| | | | | | |
| பண் | குறிஞ்சிப்பண் | பாலைப்பண் | முல்லைப்பண் | மருதப்பண் | நெய்தற்பண் |



www.Padasalai.Net www.TrbTnpsc.com

# வினாக்கள்

1.கொடைக்கானலில் குறிஞ்சிப்பூ மலர்ந்துள்ளது. இத்தொடரில் “கொடைக்கானல்“ எவ்வகை நிலப்பகுதியைக் குறிக்கும்?

அ. குறிஞ்சி
ஆ. முல்லை
இ. மருதம்
ஈ. பாலை

2.சரியான வினைமரபுச் செல்லைத் தெரிவு செய்து எழுதுக.

அ. எடுத்தல்
ஆ. வெட்டுதல்
இ. பிடுங்குதல்
ஈ. பறித்தல்



3.தேன் + எடு = தேனெடு - என்பதன் கூட்டுவினைச்சொல் எவ்வாறு ஆக்கப்பட்டுள்ளது?

அ. பெயர் + வினை = வினை
ஆ. வினை + வினை = வினை
இ. இடை + வினை = வினை
ஈ. வினை + பெயர் = வினை

4.காவிரிபூம்பட்டினம் என்னும் பெயரைக் கொண்டு அமைந்த நிலப்பகுதியில் “பட்டினம்“ என்பது எந்நிலத்தினைக் குறிக்கும்?

அ. பாலை
ஆ. மருதம்
இ. குறிஞ்சி
ஈ. நெய்தல்



www.Padasalai.Net

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# 5.உரையாடலைப் படிப்போமா! வினாக்களுக்கு விடையளிப்போமா!

யாழினியன்: மாமா, நாளை எனக்கு மிகவும் பிடித்தமான இடத்திற்கு நாம் செல்லப்போகிறோம் என்றீர்களே! அது திரையரங்குதானே?

மாமா: இல்லை, யாழினியன்! வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் செல்வத்திற்குமாகத் தமிழர்களால் அடையாளப்படுத்தப்படும் ஒன்றனைச் சார்ந்த நிகழ்வு அது.

யாழினியன்:அப்படிப்பட்ட ஒன்று என்ன மாமா? நீங்களே கூறுங்களேன்.

மாமா: மாடுகள்தான் அவை. இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வாகக் கூறப்படும் 'மாடுபிடித்தல்', 'மாடு அணைதல்' 'மஞ்சு விரட்டு' எனப் பல பெயர்களால் வழங்கப்படும். ஜல்லிக்கட்டைப் பார்க்கத்தான் நாளை செல்ல இருக்கிறோம்.

யாழினியன்: அப்படியா மாமா! மிக்க மகிழ்ச்சி! சங்ககாலத் தமிழர்கள் இயற்கையைச் சார்ந்தும் பிற உயிர்களோடு இணைந்தும் வாழ்ந்ததற்கு 'ஏறு தழுவுதலே' சிறந்த சான்று என எங்கள் தமிழாசிரியரும் கூறக்கேட்டிருக்கிறேன்.


மாமா: ஆம் யாழினியன்! அதற்கான குறிப்புகள் சங்க இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகை, ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரம், இலக்கண நூலான புறப்பொருள் வெண்பாமாலை ஆகியவற்றில் உள்ளது.

யாழினியன்: வியப்பாக இருக்கிறது மாமா!

மாமா: இன்னும் கூறுகிறேன் கேள்! வேளாண் குடிகளின் வாழ்வோடும் உழைப்போடும் பிணைந்து கிடந்த மாடுகளுடன் விளையாடி மகிழும் மரபாக உருக்கொண்டதே ஏறுதழுவுதலாகும்.

யாழினியன்: இதுவரை ஜல்லிக்கட்டை வெறும் பொழுதுபோக்கு நிகழ்வாக மட்டுமே உணர்ந்திருந்த எனக்கு, நீங்கள் கூறிய தகவல்கள் நம் பண்டைய வீர உணர்வையும் இயற்கை வேளாண்மையையும் தெளிவுற விளக்கியது மாமா!

மாமா: நம் முன்னோர்களின் இத்தகைய பண்பாட்டுக் கூறுகளைப் பேணிக்காப்பது நம் கடமையாகும் யாழினியன்!



# வினாக்கள்

1.யாழினியன் தன் மாமாவுடன் எங்கே செல்லவிருந்தான்?
அ திரையரங்கிற்கு
ஆ வணிக வளாகத்திற்கு
இ ஜல்லிக்கட்டிற்கு
ஈ பூங்காவிற்கு

2.வீரத்திற்கும் விளைச்சலுக்கும் செழிப்பிற்கும் தமிழர்களால் அடையாளப்படுத்தபடுவது எது?
அ மாடுகள்
ஆ ஆடுகள்
இ குதிரைகள்
ஈ யானைகள்

3.மாடுகளுடன் தொடர்பில்லாததை தெரிவு செய்க.
அ ஏறு தழுவுதல்
ஆ குதிரையேற்றம்
இ மாடு அணைதல்
ஈ ஜல்லிக்கட்டு



4.இளைஞர்களின் வீரத்தைப் பெருமிதப்படுத்தும் பண்பாட்டு நிகழ்வு எது?
அ மல்யுத்தம்
ஆ ஏறு தழுவுதல்
இ விற்போர்
ஈ பளு தூக்குதல்

5.'ஏறுதழுவுதல்' பற்றிக் கூறும் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று எது?
அ சிலப்பதிகாரம்
ஆ மணிமேகலை
இ வளையாபதி
ஈ குண்டலகேசி

# 6. தமிழ் – இலக்கணக்கூறுகள்


1. ஒரு சொல்லோ சொற்றொடரோ இருபொருள்பட வருவது எவ்வகை அணி?

அ)பிறிது மொழிதல்

ஆ)இரட்டுறமொழிதல்

இ)இயல்பு நவிற்சி

ஈ)உயர்வு நவிற்சி





www.Padasalai.Net



2.ஒருமை பன்மைப் பிழையற்ற தொடர் எது?

1. எருது வண்டியை இழுத்தது.
2. மாடு வயலில் மேய்ந்தன.
3. எருதுகள் வண்டியை இழுத்தது.
4.மாடுகள் வயலில் மேய்ந்தது.



# 3.முறையாக அமைந்த சொற்றொடர் எது?

1.ஆலமரத்தின் விழுதினைக் குரங்கு பாம்பு என்று அஞ்சியது

2.பாம்பு அஞ்சியது ஆலமரத்தின் விழுதினைக் குரங்கு

3.ஆலமரத்தின் குரங்கு பாம்பு என்று விழுதினை அஞ்சியது

4.விழுதினைக் குரங்கு ஆலமரத்தின் பாம்பு என்று அஞ்சியது



www.Padasalai.Net



# 4.விடைக்கேற்ற வினாவைத் தெரிவு செய்க.


கட்டபொம்மன் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடினான்.

1. கட்டபொம்மன் யாருடன் போராடினான்?
2. ஆங்கிலேருடன் போராடியவன் யார்?
3. கட்டபொம்மன் யாரை எதிர்த்துப் போராடினான்?
4. கட்டபொம்மன் எங்கு போராடினான்?



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com



# 5.பொருத்தமான சொற்றொடர் வகை எது?

1. நினைவாற்றலை வளர்த்துக் கொள்- கட்டளைத் தொடர்
2. இதற்குக் காரணம் யார்? - உணர்ச்சித் தொடர்
3. ஓவியம் குமரனால் வரையப்பட்டது-செய்வினைத் தொடர்
4. கலா நன்கு பாடிலல்- உடன்பாட்டுத் தொடர்


## பங்கப்பாளர்கள் தொடர்ந்து மொழிக்கூறு வினாக்களை வடிவமைப்போம்!



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# தேநீர் இடைவேளை





15 நிமிடங்கள்



www.Padasalai.Net


# அமர்வு 4:

## புதிய கற்றல் விளைவினை உருவாக்கலாமா!

30 நிமிடங்கள்

www.Padasalai.Net

# நாமே உருவாக்கலாமா!
# புதிய கற்றல் விளைவை!



**மனத்தில் நிலை நிறுத்துவோம்!**

**இம்மூன்றையும்...**

**1. கற்றோர் செயல்பாடு**

**2. பாடப்பொருள்**

**3. சூழல்**



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

# ஒருங்கிணைத்து எழுதுவோமா!

1. மாணவர் செயல்பாடு : தயாரித்தல்,உருவாக்குதல், பேசுதல்.

2.பாடப்பொருள்: நிகழ்ச்சி நிரல்/வரவேற்புரை/நன்றியுரை/ தொகுப்புரை/ குறிப்பிட்ட தலைப்பில் வெட்டுதல், ஒட்டுதல்

3.சூழல்: பள்ளி

## உருவாக்கினோம்!

### புதிய கற்றல் விளைவை...

பள்ளியில் நடைபெறும் கலைவிழாக்களுக்கு நிகழ்ச்சி நிரல் தயாரித்தல், வரவேற்புரை/நன்றியுரை/தொகுப்புரை உருவாக்குதல், குறிப்பிட்ட தலைப்பில் வெட்டியும் ஒட்டியும் பேசுதல்.

www.Padasalai.Net

# ஒருங்கிணைத்து எழுதுவோமா!

1. மாணவர் செயல்பாடு : கையெழுத்து இதழ் உருவாக்குதல்.

2.பாடப்பொருள்: நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள் முதலியவற்றைத் தொகுத்தல்.

3.சூழல்: பள்ளி, சுற்றுப்புறம், ஊர்

## உருவாக்கினோம்!

### புதிய கற்றல் விளைவை...

தமக்குப் பிடித்த நாட்டுப்புறப்பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், விடுகதைகள் முதலியவற்றைத் தொகுத்துக் கையெழுத்து இதழ் உருவாக்கிக் காட்சிப்படுத்துதல்

www.Padasalai.Net

# புதிய வடிவில் கற்றல் விளைவுகளை படைப்போமா?

- பிறமொழிச் சொற்களுக்கு இணையான தமிழ்ச் சொற்கள்
- அறநெறிக் கருத்துகள் / வாழ்வியல் திறன்கள்
- நாளிதழ் / பருவ இதழ் / சமூக ஊடகங்கள்
- இணையத்தில் பதிவேற்றம் செய்தல்
- அறிவியல், தொழில்நுட்பம், கலை குறித்த இலக்கியங்கள்

**இப்பாடப்பொருள் சார்ந்தோ, உங்கள் மனத்தில் தோன்றும் எண்ண ஓட்டத்திற்கேற்ப புதிய கருத்துகள் சார்ந்தும் புதிய கற்றல் விளைவுகளை படைப்போமா!**

www.Padasalai.Net

# நிலைநிறுத்துவோம்!
# நம் மனத்தில்...

பத்தியைப் படித்து பொருள் அறிந்து, இலக்கணக் கூறுகளுக்கான வினாக்களை புரிந்து கொண்டால் அதிக அடைவுத் திறனை நம்மால் பெற முடியும்.



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com




Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com